# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8074703

C

1. District மாவட்டம் : விருதுநகர் PS: காவல்நிலையம் ல.ஒ.த.பிரிவு விருதுநகர் Year ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 06/22 Date: நாள் 12.12.2022

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7 மற்றும் 12 of

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: PC Act 1988 as

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Amended in 2018

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 12.12.2022 Date to நாள் வரை about 12.00 hrs.

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.12.2022 Time : நேரம் 18.00 hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சிவகாமி நகர், கீழதிருத்தங்கல், சிவகாசி தாலுகா, விருதுநகர் மாவட்டம் சுமார் 25 கி.மீ மேற்கே

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.பிரித்திவிராஜன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.பன்னீர்செல்வம்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 21.07.1992 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

   (f) Occupation : தொழில் நிதி நிறுவன ஊழியர் (g) Address : முகவரி கதவு எண்-2/1463.A1, சிவகாமி நகர், கீழதிருத்தங்கல், சிவகாசி தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) திருமதி. உமாவதி, கிராம நிர்வாக அலுவலர், கீழதிருத்தங்கல் கிராமம், சிவகாசி தாலுகா, விருதுநகர் மாவட்டம்.
   2) திரு. பொன்ராஜ், கிராம உதவியாளர் (தலையாரி), கீழதிருத்தங்கல் கிராமம் சிவகாசி தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதமில்லை.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 10(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து அனுப்பப்படுகிறது.**

நான் இன்று 12.12.2022-ஆம் தேதி மாலை 18.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், சிவகாசி தாலுகா, கீழதிருத்தங்கல், சிவகாந்தி நகர், கதவு எண்.2/1463, A1, என்ற முகவரியைச் சேர்ந்த திரு.பன்னீர்செல்வம் என்பவரின் மகன் திரு.பிரித்திவிராஜன் என்பவர் என் முன்பாக ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, மேற்படி மனுமீது இரகசிய விசாரணை செய்ததில், எதிரிகள் மீது எதிர்மறையான குறிப்புகளும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 12.12.2022 இரவு 20.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரிகள் 1) திருமதி.உமாவதி, கிராம நிர்வாக அலுவலர், கீழதிருத்தங்கல் கிராமம், சிவகாசி தாலுகா, விருதுநகர் மாவட்டம் 2) திரு.பொன்ராஜ், கிராம உதவியாளர் (தலையாரி), கீழதிருத்தங்கல் கிராமம், சிவகாசி தாலுகா,

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

12.12.22 at 20.30 Hrs.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. BOOMINATHAN
Rank: நிலை INSP. OF POLICE, V&AC, VNR.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

**விருதுநகர் ஊ.த.க.பிரிவு குற்ற எண்.06/2022 பிரிவு 7 & 12 of PC Act 1988 as Amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

விருதுநகர் மாவட்டம், ஆகியோர்கள் மீது விருதுநகர் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.06/2022 பிரிவுகள் 7 மற்றும் 12 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தம் - 2018)-இன்படி வழக்கு பதிவு செய்தேன். மேற்படி புகார் மனு விபரம் பின்வருமாறு அனுப்புநர் பிரித்திவிராஜன், வயது 30/2022, த/பெ.பன்னீர் செல்வம், எண். 2/1463, A1, சிவகாந்தி நகர், கீழதிருத்தங்கல், சிவகாசி தாலுகா, விருதுநகர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். அய்யா, நான் விருதுநகர் மாவட்டம், சிவகாசி, கீழதிருத்தங்கல், சிவகாந்தி நகரில் எனது அம்மா, அப்பா, மனைவி மற்றும் குழந்தைகளுடன் குடியிருந்து, திருத்தங்கலில் உள்ள மகாவீர் பைனான்ஸ் என்ற தனியார் நிறுவனத்தில் குறைந்த சம்பளத்தில் அலுவலக ஊழியராக வேலை செய்து வருகிறேன். கடந்த 18.11.2006ஆம் தேதி சிவகாசி வட்டம், சிவகாசி டவுண். 307/1, ஞானகிரி ரோடு தெருவில் வசிக்கும் திரு.A.ஜோதி பிரகாசம் என்பவரின் மனைவி திருமதி.சுகவாசம் ஜோ.விஜயா என்பவருக்கு சொந்தமான கீழதிருத்தங்கல் கிராமம் அ.பு.சர்வே எண். 1503/1-இல் உள்ள வீட்டுமனை நிலத்தை திருத்தங்கல் சார் பதிவாளர் ஆவண எண்.4780/2006-இன்படி எனது அப்பா திரு.பன்னீர்செல்வம் மற்றும் அவரது தம்பியும், எனது சித்தப்பாவுமான திரு.மான்ராஜ் ஆகியோர்கள் பெயரில் பத்திரப்பதிவு செய்திருந்தார்கள். அவ்வாறு கிரையம் பெற்ற மேற்படி வீட்டுமனை நிலத்தை எனது அப்பா மற்றும் சித்தப்பா ஆகிய இருவருக்கும் சேர்த்து தனிப் பட்டாவாக மாற்றி கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். ஆகவே, நான் கடந்த 17.10.2022ஆம் தேதி எனது சித்தப்பா திரு.மான்ராஜ் பெயரில், எனது அப்பா மற்றும் சித்தப்பா இருவருக்கும் சேர்த்து தனிப்பட்டாவாக மாற்றம் செய்ய கேட்டு சிவகாசி வட்டாட்சியர் முகவரிக்கு இணையதளத்தில் விண்ணப்பம் செய்தேன். அதன்பின்பு ஒருநாள் அந்த இணையதள விண்ணப்பம் தொடர்பாக கீழதிருத்தங்கல் கிராமத்திலுள்ள வி.ஏ.ஓ அலுவலகத்திற்குச் சென்று அலுவலகத்திலிருந்த கிராம நிர்வாக அலுவலர் உமாவதி என்பவரை சந்தித்து கேட்டேன். அப்போது அவர் உங்களது இடமானது வீட்டுமனை நத்தம் நிலம், ஆதலால் உங்களது இணையதள விண்ணப்பமானது ஏற்றுக்கொள்ளப்படாமல் மண்டல துணை வட்டாட்சியரால் நிராகரிக்கப்படும், நீங்கள் சிவகாசி வட்டாட்சியருக்கு நேரடியாகத்தான் விண்ணப்பம் செய்ய வேண்டும் என்று கூறினார். ஆகையால் நான், எனது அப்பா திரு.பன்னீர்செல்வம் பெயரில், எனது அப்பா மற்றும் சித்தப்பா ஆகிய இருவர் பெயருக்கும் சேர்த்து தனிப்பட்டா கேட்டு மனு ஒன்றை தயார் செய்து கொண்டு, என்னுடைய சித்தப்பா திரு.மான்ராஜ் அவர்களுடன் சிவகாசி தாலுகா அலுவலகத்திற்கு கடந்த 01.11.2022-

ஆம் தேதி சென்று அந்த மனுவை அங்கு கொடுத்தேன். அந்த மனுமீது ஒரு மாதமாக எந்த தகவலும் இல்லாததால், மீண்டும் சிவகாசி தாலுகா அலுவலகத்திற்கு நான், எனது சித்தப்பா திரு.மான்ராஜ் அவர்களுடன் சென்று விவரம் கேட்டேன். அப்போது அங்கிருந்த அலுவலர் ஒருவர் என்னிடம், உங்க மனுவை கீழதிருத்தங்கல் வி.ஏ.ஓ அலுவலகத்திற்கு அனுப்பி விட்டோம், நீங்கள் அந்த வி.ஏ.ஓ-வை போய் பாருங்கள் என்று கூறினார். ஆகையால் நான், என்னுடைய சித்தப்பா திரு.மான்ராஜ் அவர்களுடன் கடந்த 06.12.2022-ஆம் தேதியன்று மதியம் சுமார் 12.00 மணியளவில் கீழதிருத்தங்கல் கிராமத்திலுள்ள வி.ஏ.ஓ அலுவலகத்திற்குச் சென்று, அங்கிருந்த கிராம நிர்வாக அலுவலர் உமாவதி என்பவரை சந்தித்து, எனது அப்பா திரு.பன்னீர்செல்வம் பெயரில் கொடுத்த மனு தொடர்பாக விபரம் கேட்டேன். அப்போது கிராம நிர்வாக அலுவலகத்தில் தலையாரி பொன்ராஜும் இருந்தார். அதற்கு வி.ஏ.ஓ. என்னிடம், உங்க மனுவை நான்தான் வைத்துள்ளேன், உங்களிடமுள்ள ஆவணங்களை கொண்டு வந்திருக்கீங்களா, உங்க இடத்தை நேரில் வந்து பார்த்துவிட்டுதான் ரிப்போர்ட் ரெடி பன்னனும், நான் ரிப்போர்ட் கொடுத்தால்தான் உங்களது அப்பா பெயருக்கும், உங்க சித்தப்பா பெயருக்கும் சேர்த்து தனிப்பட்டா உருவாக்க முடியும், இப்ப நான் வேறு முக்கிய வேலையாக இருக்கிறேன், நீங்க வீட்டிற்கு போங்க, நானும், தலையாரியும் உங்க இடத்தை நேரடியாக பார்வையிட வருவோம் என்று சொன்னார். அதன்பிறகு ஐந்து நாட்களாகியும் வி.ஏ.ஓ எங்க இடத்தை பார்வையிட வராததால், நான், என்னுடைய சித்தப்பாவுடன் இன்று (12.12.2022) காலை சுமார் 11.00 மணியளவில் மீண்டும் கீழதிருத்தங்கல் வி.ஏ.ஓ அலுவலகம் சென்று வி.ஏ.ஓ உமாவதியை சந்தித்து அவரிடம், என்னங்கம்மா இடத்தை பார்க்க வர்ரோம்னு சொன்னிங்க, நீங்க வரலன்னதும் விபரம் கேட்க வந்தோம் என்று சொன்னேன். அப்போது வி.ஏ.ஓ அம்மா அருகில் தலையாரி பொன்ராஜீம் நின்றுகொண்டிருந்தார், வி.ஏ.ஓ அம்மா, சரி நீங்க முன்னாடி போங்க, நாங்க இருவரும் இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்க இடத்தை பார்க்க வருவோம் என்று கூறினார். ஆகையால் நாங்கள் இருவரும் அங்கிருந்து புறப்பட்டு சிவகாந்தி நகரில் உள்ள எங்கள் இடத்திற்கு வந்து காத்துக் கொண்டிருந்தோம். பின்னர் இன்று மதியம் சுமார் 12.00 மணியளவில் வி.ஏ.ஓ உமாவதியும், தலையாரி பொன்ராஜும் எங்க இடத்திற்கு வந்து, இடத்தை பார்வையிட்டார்கள். பின்னர் அதே எங்க இடத்தில் வைத்து வி.ஏ.ஓ உமாவதி என்னிடம், நான் ரிப்போர்ட் அனுப்பனும்னா, எனக்கு ரூ.10,000/- பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டார். அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை, இருந்தாலும் அப்போது நான் அவரிடம், அவ்வளவு பணம் என்னால ரெடி பண்ண முடியாதும்மா, கொஞ்சம் குறைச்சு சொல்லுங்கம்மா என்று சொன்னேன். அதற்கு அவர், சரி ரூ.2,000/-த்தை குறைச்சுட்டு ரூ.8,000/-த்தை கொண்டுவாங்கன்னு சொன்னார். அப்போதும் நான் மீண்டும் அவரிடம்,

அவ்வளவு பணம் ரெடி பண்ண முடியாதும்மா, இன்னும் கொஞ்சம் குறைச்சு சொல்லுங்கம்மா என்று சொன்னேன். அதற்கு வி.ஏ.ஓ உமாவதி, என்னங்க இன்னும் குறைச்சு சொல்லுங்க, இன்னும் குறைச்சு சொல்லுங்கன்னு சொல்றீங்க என்று சொல்லிவிட்டு, வீட்டுமனை நத்தம் நிலத்திற்கு பட்டா கேட்டு வருகிற எல்லாரிடமும் நாங்க ரூ.10,000/-க்கு மேலதான் வாங்குவோம், நீங்க வேணும்னா இன்னும் ரூ.3,000/-த்த குறைச்சுகிட்டு, ரூ.5,000/- பணத்தையாவது கொண்டு வந்து கொடுங்க, ரூ.5,000/- கொடுத்தால்தான் உங்க அப்பா பெயரில் உள்ள மனுமீது நடவடிக்கை எடுத்து, உங்க அப்பா பெயரிலேயும், சித்தப்பா பெயரிலேயும் சேர்த்து தனிப்பட்டா கிடைக்க ரிப்போர்ட் அனுப்புவேன், இல்லாட்டி அது அப்படியேதான் கிடக்கும் என்று கண்டிப்பாகவும், கறாராகவும் சொல்லிவிட்டார். அப்போது வி.ஏ.ஓ அருகே நின்று இதை கேட்டு கவனித்துக் கொண்டிருந்த தலையாரி பொன்ராஜும், வி.ஏ.ஓ அம்மா சொல்ற மாதிரி நீங்க ரூ.5,000/- கரெக்டா கொண்டு வந்து கொடுத்திருங்க, ரூ.5,000/-த்தை கொடுத்திட்டீங்கன்னா நானும் வி.ஏ.ஓ அம்மாவ ரிப்போர்ட் அனுப்ப சொல்லிவிடுகிறேன், இதற்கு மேலேயும் லேட் பண்ணாம பணத்தோட சீக்கிரம் ஆபிசுக்கு வந்து அம்மாவ பாருங்க என்று சொல்லிவிட்டு, அந்த இடத்திலிருந்து அவர்கள் இருவரும் சென்றுவிட்டார்கள். அதன்பிறகு என்னுடைய சித்தப்பா திரு.மான்ராஜ் அவர்கள் நியாயமாக அவர்கள் செய்ய வேண்டிய அரசு வேலைக்கு நாம ஏன் அவர்களுக்கு லஞ்சம் கொடுக்கனும், நீ போய் லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்தில் புகார் கொடு என்று என்னிடம் சொன்னார். நானும், யோசனை செய்து பார்த்ததில், அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க எனக்கும் விருப்பமில்லை, நியாயமாக செய்ய வேண்டிய அரசு வேலைக்கு நாம் ஏன் லஞ்சப்பணம் தாணும் என்று நினைத்துக்கொண்டு, வி.ஏ.ஓ-வும், தலையாரியும் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.5,000/-த்தை ரெடி பண்ணிக் கொண்டு, என் அப்பா திரு.பன்னீர்செல்வம் பெயரிலுள்ள மனுமீது நடவடிக்கை எடுக்க என்னிடம் லஞ்சமாக ரூ.5,000/- பணம் கேட்ட கீழதிருத்தங்கல் வி.ஏ.ஓ திருமதி.உமாவதி மற்றும் கீழதிருத்தங்கல் தலையாரி திரு.பொன்ராஜ் ஆகியோர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (Sd) P.Prithivirajan 12.12.2022 Sir, Received the complaint on 12.12.22 at 18.00 hrs. The genuiness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found Prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case in warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.06/22 u/s 7 and 12 of PC Act 1988 as Amended in

2018 on 12.12.2022 at 20.00 hrs and took up Investigation. (Sd) R.Boominathan 12.12.22, Insp of Police, V&AC, VNR.

The Original FIR along with original complaint is submitted to the Hon'ble CJM / Spl. Judge for PC Act cases, Srivilliputhur and the copies submitted to the concerned officers.

Insp of Police, V&AC, VNR.